# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி - 2024 (கட்டம் IX)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.09.30 ஆம் திகதியில் இருந்து 2024.10.11 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.09.30 ஆம் திகதியிலிருந்து 2024.10.11 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரையிலும், 2024.10.14 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணி வரையிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **3000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.10.14 ஆம் திகதி பி.ப 1:30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.10.07 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/14/41(13)/4/Council/ PIX/2024/44** | அந்திரானை மயான வீதி புனரமைப்பு – வாதராவத்தை | 15.50 | 90 நாட்கள் | **C6& C5** **(** வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 155,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX /2024/45** | கல்வியல் கல்லூரி பின் பக்க வீதி புனரமைப்பு – கோப்பாய் மத்தி | 7.00 | 60 நாட்கள | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 70,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ DR/ PIX/2024/46** | பூலசிட்டி வீதி புனரமைப்பு , அச்செழு | 6.32 | 60 நாட்கள | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 64,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX/2024/47** | குதியடி வீதி புனரமைப்பு – கோப்பாய் வடக்கு | 4.84 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 49,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ DR/ PIX/2024/48** | கல்வியல் கல்லூரி வடக்கு பக்க வீதி புனரமைப்பு – கோப்பாய் மத்தி | 4.11 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 42,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX /2024/49** | உலக்கைப்புலம் வீதி (சலப்பாய் வீதி ) புனரமைப்பு ,ஆவரங்கால் | 2.65 | 60 நாட்கள் | **C8& C 7** (வீதி நிர்மானம் ) | 63நாட்கள் | 27,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX /2024/50** | பிராயடி வீதி புனரமைப்பு , கல்வியங்காடு | 2.74 | 60 நாட்கள் | **C8 & C7** (வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 28,000.00 | **13.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX /2024/51** | எல்லாளன் சரஸ்வதி இணைப்பு வீதி புனரமைப்பு , நவக்கிரி | 8.75 | 60 நாட்கள் | **C7 & C6** (வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 88,000.00 | **27.01.2025** |
| **NP/14/41(13)/4/Council/ PIX/2024/52** | அஞ்சல் அலுவலக பக்க வீதி புனரமைப்பு ,அச்சுவேலி தெற்கு | 1.44 | 45 நாட்கள் | **C9& C8** ( வீதி நிர்மானம ) | 49 நாட்கள் | 15,000.00 | **30.12.2024** |
| **NP/14/41(13)/4/Council/ PIX/2024/53** | நடமாடும் விற்பனைக் கூடம் அமைத்தல் | 0.93 | 45 நாட்கள் | **C9& C8** ( கட்டட நிர்மானம | 49 நாட்கள் | 10,000.00 | **30.12.2024** |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.09.30